முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 611**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

01.06.2021, செவ்வாய்கிழமை

1. வானவர்கள் போற்றும் வள்ளலே
வாழுகின்ற ஞானியே மாதவசியே
ஞானவான்கள் துணைகொண்ட ஞானதேசிகனே
ஞானிகள் பூஜைசெய்யும் ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்இனிதே
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரங்களென கலியில் உன்சக்தி கூடிவர
வையகத்தார் உன்னை தொடர்புகொண்டு வருகவருக
3. வருகவே அவரவர்க்கும் ஞான சித்தி
வழுவானபிறவா பெரும்பேறு எனும் ஜீவமுக்தி
ஆறுமுக அரங்கன் உன்தயவால் கிட்டும்
அகிலமே ஞானஆனந்தத்தை பெறும்
4. பெருமைபட யான்உன்னை வழிநடத்திவர
பிரம்மஞானத்தை உன்வழி உலகோர் அடைவர்
ஆறுமுகன் என்ஆசியும் அருளும்
அரங்கன் உன்வழி தொடர்ந்துவரும் மக்கள்பெறுவர்
5. மக்களுக்கு சித்தி அருள வேண்டியே
மாதவசி உன்னை இந்தமண்ணில் இறக்கிஇருக்க
தேக்கமின்றி உன்னை அறிந்த மக்களுக்கு
தேசிகன் உன்வழி என்திருவருளும் இலகுவாகக் கிட்டும்
6. கிட்டவே பேரின்பத்தை காட்டும் ஞானிநீ
குறையில்லாத பெரும்பேற்றை தரும் மாதவசிநீ
தட்டாது உன்னை தொடர்ந்து வந்தால்
தரணியில் எந்தவிதமான ஆபத்துகள் இருந்தபோதும்
7. போதுமென்ன அனைத்தும் அகன்றோடி
பிரணவப்பிரியன் என்தயவோடு உன்அருளால்
பூதலமே நல்ல பாதுகாப்பை பெறும்
பிரளயம்பேரிடர் பிறஅழிவு எந்ததுன்பங்களே இல்லாத
8. துன்பங்களே இல்லாது உலகம் பாதுகாப்புபெறும்
தூயநிறைவான வளமான அமைதியானச் சூழலைஅடையும்
ஆதரவாய் உன்வழி என்னை அறிய
உலகோர்க்கு பெரியவாய்ப்பும் சூழலும் தானேக்கனியும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே —சுபம்—

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.